நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 12
தொகுதி: 113
திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்
விலை: ரூ.20
திசம்பர் 2019

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறியாளர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி	உறுப்பினர்
பொறியாளர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறியாளர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர் ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர் கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர் கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர் பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் - பேராசிரியர் இரா. சதாசிவம் 4

2. சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா 6
- முதுமுனைவர் இரா. இளங்குமரனார்

3. பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தில் திருக்குறளின் செல்வாக்கு - பேராசிரியர் ப. மருதநாயகம் 8

4. எகர ஒகரத்து இயற்கையும் அற்றே
- தமிழாகரர் தெ. முருகசாமி 18

5. இலக்கணவியல் - மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்
- பேராசிரியர் செ.வை. சண்முகம் 22

6. உலகப் பண்பாட்டில் திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள் - முனைவர் உ. கருப்பத்தேவன் 38

7. மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வரலாறு 41

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள்கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

"பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரத்தில் திருக்குறளின் செல்வாக்கு" குறித்துப் பேராசிரியர் ப. மருதநாயகம் கட்டுரை இடம் பெறுகிறது.

திருவள்ளுவர் திருக்குறளில் பரவலாக இம்மைப் பேறுகளையும் மெய்ப்பொருளையும் இனிப்புக் கலந்த மருந்து போல விளக்குகிறார். அதனைப் பதஞ்சலிமுனிவர் அவருக்குரிய மெய்யுணர்வுத்திறத்தால் நுட்பமாக உணர்ந்து அச்செய்திகளைத் தம் யோக சூத்திரத்துள் எடுத்தாண்டு இருப்பதை ஆசிரியர் எடுத்துரைக்கும் திறம் உணர்தற்பாலது.

திருக்குறள் உரையாசிரியர் மணக்குடவர் பரிமேலழகர் போன்ற பெரியவர்கள் தம் உரையுள் திருக்குறளுள் பொதிந்துள்ள தியான சமாதிக் கருத்துக்களை எடுத்துரைத்திருப்பது ஈண்டு எண்ணற்பாலது.

"அளவின்கண் நின்றொழுகல்" என்னும் திருக்குறள் தொடரை விளக்கும் பரிமேலழகர் "உயிர் முதலியவற்றை அளத்தல்" என்றும் அதற்கு உபாயமாகிய யோக ஞானங்களையும் அவற்றான் எய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறு அறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானம் என்ப" என விளக்குகிறார். அளவை என்பது நீட்டல், முகத்தல், நிறுத்தல் எனப் பொருள்களை அளத்தற்குப் பயன்படுத்துவர்; அளவு என்பது பொருளை அளக்கப்பயன்படுத்திய முறை. அருளை அளக்கும் போது "measure" "immeasurable" என்ற பொருளில் பயன் பாட்டில் மருவி வந்துள்ளது. தியானம், சமாதி என்பன அளக்கலாகப் பொருள் குறித்தன. தான் என்ற மையம் இன்மையால் எல்லையற்றது, immeasurable, அளவற்றது என்னும் பொருள் குறித்தது என்பதற்குத் தருமதியானம் என்னும் ஆருகதர் கருத்தை மேற்கோள் காட்டுகிறார். அது திருக்குறள் நூற்பாவுக்கு ஆசிரியர் பரிமேலழகர் காட்டும் விளக்கமாகும். அதனால் திருவள்ளுவர் காலத்தில் அளவு என்பது அளவற்ற பொருளாகிய அருளைக் குறித்தற்கு "immeasurable" என்ற பொருளில் வழங்கியுள்ளது என்பதும் இறை என்பது அளக்கலாகப் பொருள் என்பதும் பண்டைக்காலத்தால் நம்மவர்களால் உணரப்பட்டது என்பதும் தெரிகிறது. காலத்தால் பழைமையுடைய

அருள்பேற்றுக்குரிய முயற்சிகள் திருக்குறளிலிருந்து உலகின் பிற பகுதிகளுக்குச் சென்றுள்ளதற்கு வாய்ப்புள்ளது என்னும் பேராசிரியர் கருத்து மிக்க வலிமையுடையது என்பது கருதத்தக்கது.

திருக்குறளில் உயிர், மன்னுயிர் என்று போற்றப்படுகிறது. ஆன்மா என்னும் கூற்று திருக்குறளில் யாண்டும் காணப்படவில்லை. வேதாந்த, சிந்தாந்திகள் ஆன்மா என்ற சொல்லைப் பிற்காலத்தில் பயன்படுத்தி மெய்ப்பொருளைப் புரியாத பொருளாக்கி விட்டனர் எனவும் எண்ண இடமுள்ளது.

கல்பொரு சிறு நுரையாரின் குறுந்தொகைப் பாடல் விளக்கம் கற்று இன்புறத்தக்கது. மல்லல் பேரியாற்று, பெருநுரை சிறு நுரையாகித் தேய்ந்து அழிவது போல காதலனைப் பிரிந்த தலைவியின் அன்பு நெஞ்சம் படும் அவலம் கற்பவர் மனத்தைக் கசிந்துருக வைக்கும்; காதல் வாழ்க்கையில் மனம் படும் தேம்பல் உறவினரை மட்டும் கசியவைப்பதில்லையே என்னும் ஏக்கம் படிப்பவர்களை மீண்டும் மீண்டும் துயர நினைவைத் தலைவியோடும் தோழியோடும் சேர்ந்து அன்பின் துன்பியல் இன்பத்தை உணரவைக்கிறது. கவிதை பலமுறை படித்து இன்புறத்தக்கது.

“இலக்கணவியல்; மீக்கோட்பாடும் கோட்பாடுகளும் ஒருவாசிப்பு” என்ற பேராசிரியர் இராசாராம் அவர்களின் நூலுள் வழக்கும் செய்யுளும் மரபும் வரலாறும் குறித்த விரிவான மொழிநூல் குறிப்புக்களைத் தொகுத்துப் பேராசிரியர் செ.வை.சண்முகம் நமக்கு அளித்துள்ளார். வாசகர்கள் நம் பண்டை இலக்கணத்துள் காணப்படும் வரலாறு தழுவிய இலக்கண மரபும் வழக்கும் குறித்த செய்திகளைப் பேராசிரியர் விளக்கும் முறையை ஆழ்ந்து கவனத்தில் கொண்டு கற்கவேண்டும்.

பேராசிரியர் தெ.முருகசாமி அவர்கள் எகர, ஒகரம் குறித்த ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளார். பேராசிரியர் தெ.முருகசாமி காரைக்குடித் தமிழ்க் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கல்லூரிப்பணி ஓய்ந்தாலும் அவருடைய தமிழ்ப்பணி தடைபடாத வெள்ளம். தொடர்ந்து கட்டுரை, சொற்பொழிவு என்ற முறையில் கல்விப்பணி ஆற்றிவரும் பெரியவர். அவருடைய கட்டுரை இவ் இதழில் இடம்பெறுகிறது.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

7. கல்பொரு சிறுநுரையார்

முதுமுனைவர். இரா. இளங்குமரனார்

நீர் பெருகி மோதுவதால் உண்டாவது நுரை. நீர்க்குமிழ் தனித்தது; தானே வெடித்துப்போவது; நுரை வெண்ணிறத்தது. வெள்ளப் பெருக்கில் உண்டாவது; நீரையே வெளிப்படாமல் மூடிப் படர்ந்து நீரோடு வருவது.

மலை காடுகள் மேடானவை. வழியெல்லாம் கற்கள் நிரம்பியவை; அவற்றை மோதி முட்டாமல் நீர் வர முடியாதே! அப்பொழுதில் நுரையும் முட்டத் தானே வேண்டும். முட்டிய முட்டில் பெருநுரை படிப்படியே சிறு நுரையாகி விடும். அதனை அருமையாக, 'கல்பொரு சிறுநுரை' என்று உவமைப்படுத்தியதால் அத்தொடரொடு - சான்றோர்க்குரிய பெயரொடு –அமையும் 'ஆர்' ஒட்ட, 'கல்பொரு சிறுநுரையார்' எனப்பட்டார். பொருதல் - முட்டி மோதுதல்.

தலைவன் பிரிந்து சென்றான். தலைவி ஆறாத் துயருற்றாள். இப்படித் துயருற்றால் என்ன ஆகும்; விரைவில் வருவார்; வரும் வரை பொறுத்திரு என்று வற்புறுத்தினாள் தோழி. பிரிவுத்துயரோடு தோழி வற்புறுத்தியது தலைவிக்கு மேலும் துயரூட்டியது. அவள் பக்கத்தில் இருக்க, அவளுக்குக் கேட்குமாறு பட்டவர்களுக்குத் தானே தெரியும் துயர்; படாதவர்களுக்கு இது எப்படித் தெரியும்! அவர்கள் கொண்ட வலிமை எனக்கில்லையே! என்ன செய்வேன்! கல்லை முட்டி மோதிச்

சிறுத்துச் சிறுத்து இல்லாமல் ஒழிந்து போகும் நுரையைப் போல் யாமும் இல்லாது ஒழிவேம் என்று கூறுவதாக அமைந்தது குறுந்தொகை 290 ஆம் பாடல்.

"காமம் தாங்குமதி என்போர் தாம்அ∴து
அறியலர் கொல்லோ அனைமது கையர்கொல்
யாமெங் காதலர்க் காணே மாயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே"

இது, வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் அழிவுற்றுச் சொல்லியது என்னும் கூற்று வகையது.

அரும்பொருள்: தாங்குமதி - தாங்கியிரு; அ∴து - அக்காமம் வழியாக ஏற்பட்ட பிரிவுத்துயர்; அனை மதுகையர் - அத்தகைய வலிமையர்; துனி - துயர்.

கல் மோதலால் நுரை சிறுத்தல் போல், அடித்து வரப்படும் கல்லும் சிறுத்துச் சிறுத்தும் பெருமணலாய் - குறுமணலாய் - நொய்மணலாய் ஆவதும் கண் கூடு. நீருருட்டலால் கல்லும் சிறுக்கிறது; கல் மோதலால் நீர் நுரையும் சிறுத்துப் போகிறது. இயற்கை இயங்கியலின், கொண்டு கொடுத்தல்கள் இவை என எண்ணலாம்.

பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தில் திருக்குறளின் செல்வாக்கு

பேரா. ப.மருதநாயகம்
(ப.நி.), ஆய்வறிஞர்,

நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை -600113.
கைபேசி : 9442787727

திருக்குறளின் கருத்துக்களும், உவமைகளும், உருவகங்களும் மனு நூலுக்கும், கௌடலீயரின் அர்த்த சாத்திரத்திற்கும், வாத்சியாயனரின் காமசூத்திரத்திற்கும், சுக்கிரநீதிக்கும் சென்றிருப்பதைப் போலவே பதஞ்சலியின் யோகசூத்திரத்திற்கும் சென்றிருப்பதைக் காணலாம். எல்லா வடநூல்களும் எல்லாப் பழந்தமிழ் நூல்களுக்கும் முந்தியவை என்ற எண்ணம் தக்க ஆதாரங்கள் இல்லாமல் வலியுறுத்தப்பட்ட போது ஒற்றுமைகள் கண்டபோதெல்லாம் வடநூல்களிலிருந்தே தமிழ் நூல்கள் அவற்றையெல்லாம் பெற்றனவென்பதைத் தமிழ் அறிஞர்களும் தாழ்வு மனப்பான்மை காரணமாகவும் பட்டம் பதவிகள் மேலிருந்த ஆசை காரணமாகவும் ஏற்றுக்கொண்டனர். வையாபுரிப்பிள்ளை இத்தகைய முடிவுகளுக்குத் தம்மாலான பங்களிப்பைச் செய்தார். பண்டிதமணி, தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் போன்றவர்கள் தமிழும் வடமொழியும் அறிந்தவர்களாயிருந்தும் பல ஒப்புமைகளைத் தாமே கண்டறிந்த வழியும் அவை தமிழ் இலக்கியங்களிலிருந்தே வடநூல்களுக்குச் சென்றிருக்கவேண்டும் என்று சொல்லாமல் அகில இந்திய அறிவு மரபிலிருந்து தமிழ், வடமொழிப்புலவர்கள் இவற்றைப் பெற்றிருக்க வேண்டுமென்று கூறினர். அர்த்தசாத்திரத்தைத் தமிழுக்குக் கொண்டு வந்த பண்டிதமணி திருக்குறளிலும் வடநூலிலும் காணப்படும் ஒற்றுமைகள் பலவற்றைச் சுட்டிக்காட்டுகிறார். ஆனால், அவர்காலத்தில் திருக்குறள் கி.பி.இரண்டாம்நூற்றாண்டிற்குப் பிற்பட்டதென்றும்

அர்த்தசாத்திரம் கி.மு.மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்றும் வடமொழிவாணர்கள் சொல்லி வந்த கருத்து நம்பப்பட்டது. வடநூல்களின் கால ஆராய்ச்சியை மேலை அறிஞர்கள் முறையாக மேற்கொண்ட பொழுதுதான் மனுநூல், அர்த்தசாத்திரம், காமசூத்திரம், சுக்கிரநீதி போன்றவையெல்லாம் திருக்குறளுக்கு ஒரு சில நூற்றாண்டுகள் காலத்தால் பிற்பட்டவையென்பது தெளிவாகியது. சுக்கிரநீதியைத் தமிழில் மொழிபெயர்த்த வேங்கடசாமி நாட்டார் அதில் பல திருக்குறள் கருத்துகள் பொதிந்து கிடப்பதைச் சுட்டிக்காட்டினார். பதஞ்சலிமுனிவரின் யோகசூத்திரத்திலும் திருக்குறளிலும் காணப்படும் ஒற்றுமைகளை அடையாளம் காட்டிய விபுலானந்த அடிகள் அவையெல்லாம் திருக்குறளிலிருந்து யோகசூத்திரத்திற்குச் சென்றவை என்று சொல்லத் தயங்கக் காணலாம்.

'நூல்களிலெல்லாம் சிறந்த நூலாகிய திருக்குறள' ('Tirukkural as the Book of Books') என்னும் ஆங்கிலக் கட்டுரையில் விபுலானந்த அடிகள் கூறும் கருத்துதொன்று ஆய்வாளர்களின் கவனத்திற்கு உரியதாகும்.

பதஞ்சலியின் யோகசூத்திரத்தில் யோகத்தின் கட்டுப்பாடும் பயிற்சியும் பற்றிப் பேசும் இரண்டாம் பகுதியே இன்றியமையாச் சிறப்புடையதாகும். இதில் பேசப்படும் தலைப்புகள் முழு அளவில் விளக்கம் பெற்றுத் திருக்குறளின் கீழ்க்கண்ட அதிகாரங்களில் இடம் பெறுகின்றன:

1, 8, 10, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 23, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 35, 36, 37, 40, 42, 43, 44, 45, 46, 58, 61, 66, 67, 79, 84, 85, 90, 97, 98, 99, 100,101&107.

முப்பத்தாறாம் அதிகாரம் யோகசூத்திரம் பிற தலைப்புகளில் கூறும் கருத்துகளின் சுருக்கமாகும்.

அடிகள் சுட்டும் பகுதிகளை ஆழ்ந்து நோக்குவார் யோகசூத்திரம் திருக்குறளுக்கு எந்த அளவிற்குக் கடன்பட்டிருக்கிறது என்பதை அறியலாம். ஆழ்நிலைத் தியானத்திற்கு

இடையூறு செய்பவை ஐந்து என்பார் பதஞ்சலி. அவையாவன: அறியாமை, தன்முனைப்பு, பற்று, வெறுப்பு வாழ்வில் ஆசை. அறியாமையே பிற நான்கு பிணிகளுக்கும் மூலமாகும். இத்தொல்லைகள் நான்கு நிலைகளில் இடம்பெறும். (1) மேலெழுந்தவாரியாகத் தெரியாது மறைந்து கிடக்கும். ஆனால் ஏதேனும் தூண்டுதல் ஏற்பட்டால் அது ஆற்றலுடன் செயல்படும். (2) வலியற்ற நிலையில் இருக்கும். மனப்பயிற்சிகளால் இது கட்டுக்குள் அடங்கியிருக்கும். (3) ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரு பிணிகள் ஒன்றையொன்று மாறிமாறி வெற்றி கொள்ளும் நிலை. (4) ஏதேனும் ஒரு தொல்லை நீடித்திருக்கும். அறியாமை என்பது எது? நிலையாததை நிலைத்ததென்றும், தூய்மையற்றதைத் தூய்மையான தென்றும், தீயதை நல்லதென்றும், தானில்லாததைத் தானென்று கொள்ளுதல் அறியாமையாகும். அறியாமையென்பது ஒன்றும் அறியாத நிலையன்று. உண்மையான அறிவு இல்லாமையே அறியாமை ஆகும். ஒரு பொருளின் உண்மைத் தன்மையை அறியாது அதைத் தவறாகப்புரிந்து கொள்ளுதல். தன்முனைப்பு அல்லது அகங்காரம் என்பது எது? பார்க்கும் ஆற்றலையும் அதனைத்தரும் ஆற்றலையும் ஒன்றென்று தவறாக எடுத்துக்கொள்வது. முன்னது மூளை அல்லது அறிவு; பின்னது ஆன்மா. அறிவு, உடல், கருத்துகள், எண்ணங்கள் ஆகியவையெல்லாம் மாறுபாட்டிற்கு உட்பட்டவை; ஆன்மா மாறுபாட்டிற்கு உட்பட்டது அன்று. அளவற்றதான ஆன்மாவை ஒருவனது உடலாக எடுத்துக்கொள்ளுதற்குக் காரணம் அறியாமையோ, அகங்காரமோ ஆகும். சில சமயங்களில் அகங்காரத்தால் ஒருவன் சினம் கொள்ளலாம். அகங்காரத்தை ஒழிக்க வேண்டுமானால் அதனால் விளையும் உணர்ச்சிகளை அடையாளம் காணவேண்டும்.

பற்று என்பது எது? இன்பத்தில் நாட்டம் கொள்ளுதலே பற்று ஆகும். ஒருவனுக்கு ஒரு பொருள் இன்பம் தருமானால் அவன் அதன்மேல் பற்றுதல் கொண்டு அதனை மீண்டும் மீண்டும் துய்க்க விழைகிறான். துன்பத்தை ஒதுக்குதலே வெறுப்பு ஆகும். ஒருவனுக்கு ஒரு பொருள் மகிழ்வைத் தராது, துன்பம் தருமானால் அதனை எதிர்கொள்ள அவன் விரும்பமாட்டான். எனவே அது அவனது வெறுப்பிற்குக் காரணமாகிறது. எது வாழ்வில் ஆசை? இவ்வுலகில்

ஒவ்வொரு மாந்தனும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டேயிருக்க வேண்டுமென்றும் மரணமே வரக்கூடாதென்றும் ஆசைப்படுகிறான். கல்லாதவர் மட்டுமல்லாமல், பெருங்கல்வி பெற்றாரும் வாழ்க்கையில் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் வாழ்வின் மேலுள்ள ஆசையை நீக்குவதில்லை.

இவ்வைந்து பிணிகளையும் ஒருவன் எவ்வாறு வெல்வது? அவற்றிற்கு எதிரான எண்ணங்களால்தான் ஒருவன் அவற்றைத் தவிர்க்க இயலும். வெறுப்பை அன்பாகவும் மன்னிக்கும் ஆற்றலாகவும் மாற்றிக் கொண்டால் மன அமைதியைப் பெறலாம். இம்முறையில் இவ்வைந்து நோய்களையும் அழிக்க முடியவில்லையானாலும் ஆற்றல் இழக்கச் செய்யலாம்.

இவை ஐந்தும் இன்பமாகவும் துன்பமாகவும் தொடர்ந்து வடிவெடுக்கின்றன. இவற்றையெல்லாம் தியானத்தால்தான் கட்டுப்படுத்தமுடியும்.

இத்தொல்லைகளெல்லாம் முற்பிறவியில் செய்த வினைகளின் விளைவே. இவை பின்வரும் பிறவிகளிலும் தொடரும்.

ஒருவன் பிறக்கும் குடி, வாழும் நாள், இன்ப துன்ப அனுபவங்கள் ஆகியவற்றையெல்லாம் அவன் முற்பிறவியில் செய்த வினைகளே முடிவு செய்கின்றன.

இன்பமும் துன்பமும் நல்வினை, தீவினைகளோடு தொடர்பு உடையன. நல்லது, தீயது ஆகியவற்றைப் பகுத்தறியும் ஆற்றல் கொண்ட பேரறிவாளனுக்கு எல்லா அனுபவங்களும் துயரம் நிறைந்தவையே. மாறுதல்கள், கவலை, சமஸ்காரங்கள் ஆகியவையே இத்துயரத்தை விளைவிக்கின்றன. அவற்றோடு, குணங்களின் செயல்பாடுகளுக்கும் அறிவின் மாறுதல்களுக்கும் உள்ள உள்முரண்பாடுகளும் இத்துயர வாழ்விற்குக் காரணமாகின்றன. எல்லாப் பொருள்களும் மாறுதலுக்கு உட்பட்டவை; மாறுதல் என்பது இயற்கையின் விதி. ஒருவன் வாழ்க்கை இன்பங்களைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டிய கவலையால் பல துன்பம் தரும் முயற்சிகளை மேற்கொள்கிறான்.

வரப்போகும் தொல்லையைத் தவிர்க்க வேண்டும். ஏற்கனவே வந்த துன்பத்தையும், இப்பொழுது அனுபவிக்கும் துன்பத்தையும் தவிர்த்தல் இயலாது.

பார்ப்போனுக்கும் பார்க்கப்படும் பொருளுக்கும் உள்ள தொடர்பு புறக்கணிக்கப்படவில்லையானால் துன்பமே விளையும். பார்ப்போனாகிய புருடனுக்கும் பார்க்கப்படும் பொருளாகிய பிரகிருதிக்கும் உள்ள உறவு ஒதுக்கப்பட வேண்டியதாகும். (II 3- 16)

யோகப்பயிற்சிகளின் எட்டு அங்கங்களாகப் பதஞ்சலி கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுவார்: (1) பொறையுடைமை (2) ஒழுக்கமுடைமை (3) நிலைகுலையாமை (4) மூச்சை அடக்கல் (5) அடக்கமுடைமை (6) கவனம் (7) தியானம் (8) சமாதி. இம்முறைமையே பதஞ்சலியின் அஷ்டாங்கயோகம் என்று அழைக்கப்பெறும். யோகத்தின் இன்றியமையாக் கூறுகளை முறையாகக் கடைப்பிடிப்பதால் ஒருவன் கைவல்ய நிலையை அடைதல் இயலும் என்பது அம்முனிவரின் துணிபு.

பொறையுடைமையை வரையறை செய்யும் போது நியமங்கள் என்றழைக்கப்பெறும் ஐந்து பண்புகளை அவர் குறிப்பிடுவார். (1) கொல்லாமை (2) மெய் கூறுதல் (3) கள்ளாமை (4) புலனடக்கம் (5) வெ.ஃ.காமை.

கொல்லாமை: பிறவுயிர்களுக்குத் துன்பம் தராமையும் வன்முறைகளில் ஈடுபடாமையும்.

மெய்கூறுதல்: வாய்மையும் பொய்யாமையும்.

கள்ளாமை: பிறர்பொருளைத் திருடாதிருத்தல்.

புலனடக்கம்: ஐம்பொறிகளைத் தீய வழிகளிலிருந்து காத்தல்.

வெ.ஃ.காமை: மேலும் மேலும் பொருள் சேர்த்தலை விரும்பாமை.

மக்கள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து நெறிகள் இவை. சாதி, இடம், காலம், சூழல் ஆகியவை கருதிய வேறுபாடுகள்

இந்நெறிகளைப் பொறுத்த மட்டில் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படமாட்டா.

தூய்மை, உள்ளநிறைவு, தவம், தானே கற்றல், இறைவனிடம் அடைக்கலம் புகுதல் ஆகியவை பேணப்பெற வேண்டியவை.

மனம் தீய எண்ணங்களால் அலைப்புறும்போது அவற்றிற்கு நேர் எதிரான சிந்தனைகளில் ஈடுபடவேண்டும். தீய எண்ணங்கள் எவ்வாறு தோன்றுகின்றன? அவை எத்தகையவை? ஒருவன் தானே வன்முறைச் செயல்களை மேற்கொள்ளலாம்; பிறரால் அவற்றைச் செய்விக்கலாம்; பிறர் செய்வனவற்றை ஒப்புக்கொள்ளலாம், அல்லது ஆதரிக்கலாம். வன்முறைச் செயல்களுக்குப் பேராசையோ, சினமோ, மயக்கமோ காரணமாகலாம். அவை எளியவையாக இருந்தாலும், இடைப்பட்டவையாக இருந்தாலும், கொடியவையாக இருந்தாலும் துன்பம் தருதலால் தவிர்க்கப்படவேண்டியவை.

வன்முறையைத் தவிர்த்தல் வெறுப்பை அழித்து அன்பைப் பெருக்கும். வாய்மையில் வேரூன்றினால், செயல்கள் இன்றியும் பயன் பெறலாம்.

கள்ளாமையில் நிலைத்திருந்தால் பொன்னும் பொருளும் ஒருவனைத் தாமாகவே வந்து சேரும்.

ஐம்பொறிகளைக் கட்டுப்பாட்டில் வைத்தால் உடல், உள்ள வலிமைகள்கூடும். பேராசையை அறவே நீக்கினால் சென்ற பிறவிகளைப் பற்றி அறியும் ஆற்றல் உண்டாகும்.

உடல்தூய்மை பேணப்பட்டால் உடலின்மேல் உள்ள பற்று நீங்கி அதில் வெறுப்பு ஏற்படுகிறது: பிற உடல்களோடு உறவு கொள்ளுதல் தவிர்க்கப்படுகிறது.

உள்ளத்தூய்மை காக்கப்பட்டால் நல்ல பண்பு வளர்கிறது; புலன்கள் கட்டுப்பாட்டிற்குள் வருகின்றன; உண்மையான ஆன்ம அறிவு துளிர்க்கிறது. மனநிறைவு பேரின்பம் விளைக்கிறது. தவத்தின் பயன் பொறிகளின் ஒழுங்காகும்.

ஒருவன் தன் நூலறிவைப் பெருக்கிக்கொள்ளுதலால், தான் விரும்பும் தெய்வத்தை நெருங்குகிறான்.

ஒருவன் தன் எல்லாச் செயல்களையும் இறைவனுக்கு அர்ப்பணிப்பதால், அவனது தியானம் முழுமை பெறுகிறது.

இறைவனிடம் அடைக்கலம் புகுவதால் ஒருவனுடைய உலகப்பற்றுகள் நீங்குகின்றன.

ஒருவன் தன் நிலைமாறாமல் உறுதியாக இருப்பானாகில் அது தியானத்திற்குத் துணைசெய்யும்; அவனது இலக்கை அடைவான். ஆசனத்தில் வெற்றிபெற, உடலை ஓய்வு நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆசனத்தை ஒழுங்குறச் செய்வதற்கு, வரையறையற்ற ஒன்றை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆசனத்தை ஒருவன் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடுவானாகில் அவனை வெப்பம்-குளிர், இன்பம்-துன்பம் போன்ற ஒன்றுக்கொன்று எதிரான இருமுனைகள் தாக்க இயலாது.

ஆசனத்தில் முழுமை பெற்ற பின், யோகத்தின் அடுத்த அங்கமாகிய பிராணாயாமமாகிய மூச்சைக் கட்டுப்படுத்தலுக்குச் செல்லவேண்டும்.

பிராணாயாமத்தின் மூன்று கூறுகள்: (1) காற்றை மூக்கின் வழியாக உள்ளுக்கு இழுத்தல் (2) காற்றை மூக்கின் வழியாக வெளியேற்றல் (3) மூச்சைச்சிறிது நேரம் நிறுத்திவிடுதல்.

இம்மூன்று கூறுகளும் இடம், காலம், எண்ணிக்கை ஆகிய மூன்றிற்கும் ஏற்றவாறு கட்டுப்படுத்தப்பெறல் வேண்டும். மூன்று பிராணாயாமங்களும் நான்காவது பிராணாயாமத்திற்கு வழி வகுக்க வேண்டும். காற்றை மூக்கின் வழியாக உள்ளுக்கு இழுத்தல், காற்றை மூக்கின் வழியாக வெளியேற்றல் ஆகிய இரண்டையும் தாண்டிய பிராணாயாமம் இதுவாகும். எல்லாச் செயல்பாடுகளும் மறைந்து விடுகின்ற இதுவே உண்மையான பிராணாயாமம் ஆகும்.

ஒருவனது உள்ளொளியானது, அறியாமையால் விளையும் பிணிகளால் மறைக்கப்படுகிறது. அதனால் அவன் தன்னை உணர்தலில் தோல்வி அடைகின்றான். நான்காவது பிராணாயாமப்

பயிற்சியால் உள்ளொளியை மறைக்கும் திரை தன் வலிமையை இழக்கிறது. எனவே, ஒருவன் உண்மையை நெருங்குகிறான்.

மூச்சைக்கட்டுப்படுத்தலால் ஒருவனது மனமானது பல வழிகளில் இழுக்கப்படாமல், தடுமாற்றங்கள் இல்லாமல் நிலைபெறுகிறது. எனவே, அவன் ஒருமனப்பட்ட செயல்களுக்கான ஆற்றலைப் பெறுகிறான்.

'பிரத்யாகாரா' என்பது கட்டுப்பாடு ஆகும். ஐம்புலன்கள் ஒருவனது கட்டுப்பாட்டிற்குள் வருமானால், புறப்பொருள்களோடு அவற்றின் தொடர்பு நிறுத்தப்படுகிறது. எனவே, பொறிகள் செயல் இழக்கின்றன; மனத்திற்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொள்கின்றன.

பிரத்யாகாரத்தை ஒருவன் தொடர்ந்து பயிற்சி செய்வானாயின் நாளடைவில் அவனது புலன்கள் அவனுடைய முழுக்கட்டுப்பாட்டிற்குள் வந்து விடுகின்றன. (II 29 – 55)

திருக்குறளின் முப்பத்தாறாம் அதிகாரமாகிய 'மெய்யுணர்தல்' பதஞ்சலி முனிவர் முதல் பகுதியாகிய 'சமாதி பாதா'விலும் மூன்றாம் பகுதியாகிய 'விபூதி பாதா'விலும் கூறும் கருத்துகளைச் சுருக்கமாகத் தருகிறதென்று விபுலானந்த அடிகள் புலப்படுத்துவார். உண்மையென்னவென்றால் தமது இரண்டாம் பகுதியாகிய 'சாதன பாதா'விற்குத் திருக்குறளின் மேலே குறிப்பிட்ட அதிகாரங்களிலிருந்து கருத்துகளை யெடுத்துக் கொள்ளும் முனிவர் முதல் பகுதியிலும் மூன்றாம் பகுதியிலும் 'மெய்யுணர்தல்' எனும் அதிகாரத்திலிருந்து பெற்ற சில எண்ணங்களை விரிவாகத் தருகிறார்.

"மெய்யுணர்த"லில்(36) கீழ்க்கண்ட குறட்பாக்கள் இடம்பெறும்

1. **பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்**
   மருளானாம் மாணாப் பிறப்பு
2. **இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
   மாசறு காட்சி யவர்க்கு

3. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து

4. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு

5. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

6. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி

7. ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

8. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு

9. சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்

10. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்

பதஞ்சலிமுனிவரின் யோக சூத்திரத்தின் இரண்டாம் பகுதியில் எடுத்தாளப் பட்டிருக்கும் குறள்கள் வருமாறு (முதலில் வருவது அதிகார எண்; அடுத்து வருவது குறள் எண்)

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (1:7)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார். (1:10)

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு (8:75)

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற (10:95)

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி (12:115)

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது (13:124)

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து (13:126)

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (14:131)

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும் (14:133)

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார் (15:149)

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று (16:152)

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு (17:161)

இலமென்று வெ.:.குதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சியவர் (18:174)

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல் (19:184)

...... தொடரும்

எகர ஒகரத்து இயற்கையும் அற்றே

தமிழாகரர் தெ.முருகசாமி,
(மேனாள் முதல்வர்,
இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி)
புதுச்சேரி-9.
கைபேசி : 4132273573

தொல்காப்பிய எழுத்ததிகார நூல் மரபு கூறும் 'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே' (16) என்ற நூற்பா உயிர்க் குறிலான எ,ஒ எழுத்துக்களின் வரிவடிவம் பற்றியதாகும்.

இதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஏகார ஓகார வடிவ வேற்றுமையில் எகர ஒகரங்கள் மெய்போல் புள்ளிபெற்று குறில் எழுத்துக்களாகக் காணப்படும் என்றனர்.

இப்படி, இருவரும் ஏகார ஓகாரத்தின் வழி எகர ஒகரங்களின் வரிவடிவைக் கூறியதாகத் தெரிகிறது. இதனால், மெய் எழுத்தைப் போல உயிர் எழுத்துக்களில் எ,ஒ இரண்டும் எ், ஒ் எனப்புள்ளி பெறும்போது குறில் என்றும் அப்புள்ளி பெறாதபோது நெடில் என்றும் உணரப்படும் எனத் தெரிகிறது.

இந்த வகையில் எகர ஒகரத்து.... என்ற நூற்பா குறில் நெடில் உணர்தற்காகக் கூறப்பட்டதா? என உணர்ந்து தெளிய வேண்டி இக்கட்டுரை எழுதப்பட்டது.

பொதுவாக மெய்எழுத்து புள்ளிபெறும் வடிவத்துடன் ஒலிப்பில் அரைமாத்திரை அளபினதாகும் என்பது கருத்து. சுட்டப்பட்ட எ,ஒ மட்டும் புள்ளிபெற்று உயிர்க்குறிலாய் மற்றும் நெட்டெழுத்தின் குறைந்த மாத்திரையாய் இருக்கும் என்றால் எ, ஒ போல உயிரில் அ, இ, உ எனும் எழுத்துக்கள் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

அதாவது, அ, இ, உ என்பன புள்ளிபெறும் வரிவடிவையும் நெட்டெழுத்தில் குறைந்த ஒருமாத்திரை அளவும் பெறாவா? என்று எண்ணத்தோன்றுகிறது. எ, ஒ எழுத்துக்கள் பெறும் இலக்கணத் தகுதி அ, இ, உ எழுத்துக்களும் பெற வாய்ப்புள்ளபோது எ,ஒ மட்டும் கூறப்பட்டதில் ஓர் உண்மை ஒளிந்துள்ளது எனலாம். கண்டறியப்படும் உண்மையால் நெடில்வழிக் குறிலாக எகர ஒகரங்களை உணராமல் எகரக் குறுக்கம், ஒகரக் குறுக்கம் பற்றி உணரக் கூறப்பட்டதாகத் தெளிய வேண்டும்.

இந்தக் குறுக்கம் பற்றிய இலக்கணக் கருத்து அ,இ,உ எழுத்துக்களுக்கு இல்லை. அகரக்குறுக்கம், இகரக்குறுக்கம், உகரக்குறுக்கம் எனக் கூறப்படுவதில்லை என்ற உறுதியான கருத்தால்தான் எகர ஒகரங்கட்கு மட்டும் நூற்பா செய்யப்பட்டது. இந்த ஈரெழுத்துக்களுக்கான குறுக்கங்கட்குரிய இலக்கியச் சான்றுகள் உண்டு.

'உயர்வற உயர் நலம்உடையவன் எவன்அவன்' என்ற நம்மாழ்வார் திருவாய்மொழி முதற்பாடலின் ஈற்றடியான 'துயரறு சுடரடி தொழுதெழு என் 'மனனெ' என்பதன் இறுதிச்சொல்லின் ஈறு 'மனனே' என்பதாக இல்லாமல் 'மனனெ' எனக் குறிலாய் உள்ளதாகப் பாடப்பட்டதைப் பாவேந்தர் பாரதிதாசன் தம்மிடம் யாப்பிலக்கணம் கற்றுக்கொண்ட தமிழ் அன்பரிடம் பாடம் நடத்தியதாய் அப்பாடம் கற்ற புதுச்சேரியைச் சார்ந்த பல் மருத்துவர் சித்தன் என்பவர் (இவர் தற்போது நூறாண்டு கடந்த நிலையில் இயற்கை எய்தினர்) கூறினார். மேலும், அப்பாடலில் நெடிலே இல்லை என்றாராம். இவ்வாறே, பிள்ளைத் தமிழின் தாலப்பருவத்தில் இறுதியாகத் தாலோதாலேலோ என்பது தாலோதாலேலொ என்பதாகச் சிறுபான்மையாய் ஒகரக் குறுக்கம் வருவதுண்டு.

இப்படியாகச் செய்யுளில் ஓரோவழி இயல்பாக அமையும் எகர ஒகரக்குறுக்கம் புள்ளிபெறா என்பதாயிற்று. பாடுவோரின் இயல்பில் தெளிவாக அக்குறுக்கம் உணரப்படுவது போல் அல்லாதவாறு, சிறுபான்மையாய் நெடில் எழுத்தாகவே இருந்து குறில் ஒலிபெறும் என்பதாகத் தொல்காப்பியர் கூறும் நூற்பா வழியும் உணரலாம்.

ஈற்றுநின் றிசைக்கும் ஏஎன் இறுதி
கூற்றுவயின் ஓரள பாகலும் உரித்து.

என்ற சொல்லதிகார இடையியல் நூற்பா(38) உரையில் சேனாவரையர், 'கடல்போல் தோன்றல காடிறந்தோரே' என்ற அகநானூற்றின் முதல்பாட்டின் ஈற்று வரியை எடுத்துக் கூறி 'ஈண்டு ஈற்றசை ஏகாரம் ஒருமாத்திரைக்குரித்து' என்றது வரிவடிவில் மாற்றமில்லாத ஒலிமாற்றத்தை ஓரோ அறியவேண்டும் என்றார்.

இவ்வாறே, ஐகாரக்குறுக்கம் போல ஔகாரக்குறுக்கத்தையும் எழுத்து வடிவம் மாறாத அளவில் ஒலி மாற்றத்தால் குறுக்கத்தை உணர வைத்ததைக் கீழ்க்கண்ட நூற்பா உரையால் உணரலாம்.

ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான

என்பது எழுத்ததிகார நூல்மரபு நூற்பா (57) இந்நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் ஐகாரக் குறுக்கத்திற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும் எடுத்துக்காட்டுக்கள் காட்டும்போது ஐ,ஔ என்பன செய்யுளில் நெடிலாய் இருந்தே குறிலாய் ஒலிப்பதாக உணர்த்தினார்.

இங்ஙனமெல்லாம் உணரப்படும் நிலையில்தான் மேற்கூறிய எகர ஒகாரத்து இயற்கையும் அற்றே என்பதைப் புள்ளி பெற்றதாக உணரும்வழி அந்த அடையாளம் குறில் என்பதாகக் குறிக்காமல் எகர

ஒகரக்குறுக்கங்களைச் சுட்டுதற்குக் கூறப்பட்டதாகத் தெளிய வேண்டும்.

இவ்வாறாகக் குறுக்கம் பற்றி உணர 'உட்பெறுபுள்ளி உருவா கும்மே' என்ற நூல்மரபு நூற்பா(14)வின் கருத்தைத் துணையாகக் கொள்ளலாம்.

மகரம் மெய்எழுத்து. அது புள்ளிபெறும் இயல்பில் அரை மாத்திரை ஒலிப்புடையது. அந்த அரைமாத்திரையும் கால் மாத்திரையாகும் போது மகரக் குறுக்கம் எனப்பெயர் பெறும்.

அரையளபு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங் காலை (13)

இந்த மகரக்குறுக்கத்திற்கான வரிவடிவைக் குறிக்கவே தொல்காப்பியர் 'உட்பெறு புள்ளி உருவா கும்மே' என (14) அடுத்த நூற்பாவாகக் கூறினார். இது பழங்கால நிலையாகும்.

எனவே, இந்த நூற்பாவின் கருத்தாடல் வழியே, 'எகர ஒகரத்து இயற்கை' என்ற நூற்பாவை உணர்ந்தால் இந்நூற்பா எகர ஒகரக் குறுக்கத்திற்குக் கூறப்பட்டதன்றி, உரையாசிரியர்கள் கூறியவாறு நெடில்வழி குறிலைக் குறிக்கப் புள்ளியிட்ட எழுத்தாக எகர ஒகரத்தை உணரவேண்டும் என்றது இல்லையாம் எனலாம்.

இலக்கணவியல்: மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்

(ஒரு வாசிப்பு)

பேராசிரியர்.செ.வை.சண்முகம் (ப.நி.)
மொழியியற்புலம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
சிதம்பரம். கைபேசி : 98631 96476

சென்ற இதழின் தொடர்ச்சி....

7.1. தரவு

வடமொழி இலக்கணத்துக்கு வேதங்களும் கிரேக்க, ரோமன் இலக்கணங்களுக்கு அவ்வவ் மொழியில் எழுந்த காப்பியங்களும் பிரதி என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

7.1.1.வழக்குஞ் செய்யுளும்

தொல்காப்பியப் பாயிரம் 'வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்' என்றும், தொல்காப்பியமே சொல்லதிகார இறுதியில் (எச்சவியல் 67) 'செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்/ மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்' என்றும் குறிப்பிட்டுள்ளது வழக்கும் செய்யுளும் தமிழ் இலக்கணத்துக்குரிய தரவு என்று ஆகிறது. இறுதியில் (ப.136) செய்யுள் எனவே உரையும் (செய்யுளுக்கான விளக்கம்) அடங்கும் என்று(ப.362) உரையும் ஒரு தரவாகிறது. அதாவது செய்யுள், வழக்கு, உரை ஆகிய மூன்று வகைத் தரவுகள் தமிழ் இலக்கணங்களுக்கு அமைகின்றன.

7.1.1.1. செய்யுள்

செய்யுள் என்பது கவிதையை மட்டும் குறிக்காமல், தொல்காப்பியம் யாப்பு வகைகளாகக் (செய்யுளியல்78) குறிப்பிட்ட பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம். முதுசொல் என்ற ஏழு வகைகளில் பாட்டு,உரை ஆகிய இரண்டும் தரவாக அமைவதாகக் (ப.116) குறிப்பிடப்பட்டுள்ளது.

7.1.1.2.வழக்கு

'வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே/நிகழ்ச்சி அவர்கட் டாக லான' (மரபியல் 94) என்பதால் உயர்ந்தோர் வழக்கே தரவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது புலனாகிறது.

தொல்காப்பியர், 'வழக்கும் செய்யுளும்' என்று வழக்குக்கு முதன்மை கொடுத்துள்ளது வழக்கையே முதன்மைப் பிரதியாகக் கருதினார் என்பதையும், வழக்கின் உயிர் ஆற்றலையும், இயங்கு நிலையை உணர்ந்ததையும் புலப்படுத்துகிறது. உயர்ந்தோர் வழக்கு என்பது உயர்ந்தோர் பேச்சு வழக்கு என்பதால் மொழிப் பயன்பாட்டுக்கு (language use) அதிக அழுத்தம் தரும் போக்கு காணப்படுகிறது(ப.118).

தொல்காப்பியம், பிறப்பியலில் (20.4,5) 'எழுதரு வளியின்.. அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே' என்று கூறுவதால் "வடமொழியில் வேத பாராயண முறையே வேத வழக்காகவும் உயர்ந்தோர் வழக்கில் ஒரு கூறாகவும் கருதப்பட்டது போலத் தமிழில் இலக்கியப் பாராயணம் உலக வழக்காக இடம் பெறாமையால்...எழுத்துகளை உயர்ந்தோர் உச்சரித்த விதம் உயர்ந்தோர் வழக்காகக் கருதப்பட்டுப் பிரதியாயிற்று... உயர்ந்தோர் பேச்சு வழக்கு இலக்கண உருவாக்கத்தின் முதன்மைப் பிரதியாயிற்று எனக் கூறலாம்"(ப.121தொ.)

"வழக்கு, சமகாலச் சமூகச் செயற்பாட்டின் கருத்தைப் புலப்படுத்தும் நடவடிக்கையை மையமாகக் கொண்டது. எனவேதான், வழக்கின் இயக்கம் சமூக இயக்கத்தின் ஒரு அங்கமாகக் கருதப்படுகிறது. இவ்வியக்கம் சமூகப் பயன் நோக்கிய ஒரு நடைமுறைச் செயற்பாடு. செய்யுளைக் காட்டிலும் கூடுதல் பயன்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டது. எனவே, மாற்றங்களுக்கு உள்ளாகிப் பொதுநிலையாக்கத்தின் எல்லாச் சோதனைகளுக்கும் ஆட்பட்டு நிலைபேறு அடைகிறது"(ப.122).

தொல்காப்பியப் பாயிரம் "வடவேங்கடம் தென்குமரி / ஆயிடைத் / தமிழ் கூறு நல்லுலகத்து / வழக்கும் செய்யுளும்" என்று மொழியின் நிலக்கிடைப்பைக் கூறுவதன் மூலம் 'வழக்கு' என்பதைப் புலப்படுத்தியுள்ளது. இது பிற்கால இலக்கணங்களிலும் காணப்படுகிறது.

தொல்காப்பியமும், சில சூத்திரங்கள் மூலம் (நூன்மரபு 6, புணரியல் 9, வினையியல் 44, வேற்றுமை மயங்கியல் 19), நன்னூலும் (162) வழக்குக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

'வழக்கிற்கு உரியன செய்யுட்காம்' என்று தெய்வச்சிலையாரும் (வினையியல் 14) குறிப்பிட்டுள்ளார். இளம்பூரணர் (எச்சம்.1) செய்யுள் ஈட்டச் சொற்களில் 'இயற் சொல், திசைச்சொல், வடசொல் ஆகிய மூன்றும் வழக்கிற்கு உரியவாகி செய்யுட் புகும்'. செய்யுள் ஈட்டச் சொற்களில் இன்னொரு வகையான திரிசொல் 'செய்யுட்கே உரியது' என்று கூறிய கருத்தும் அறியத் தகுந்தது.

மேலும், தொல்காப்பியர் காலம் முதல் வீரசோழியர் காலம் வரையிலான இடைப்பட்ட காலத்தில் பேச்சு வழக்கில் ஏற்பட்ட பல மாற்றங்களை (ழ>ள,ழ>ட, முதலியன) வீரசோழியம் பதிவு செய்துள்ளது. வீரசோழியம் வடமொழி சந்தி விதி கூறுவதும் அவர் கால வழக்கில் வடமொழி ஆதிக்கத்தை உணர்த்துகிறது (ப.127).

செய்யுள் வழக்கைக் காட்டிலும் உயர்ந்தோர் பேச்சு வழக்கு கூடுதலான இயங்காற்றலும் பரிணாம வளர்ச்சியும் உடையது. பிழை திருத்தமும், மொழித் தூய்மையும் இவ்வழக்கை ஒட்டிய அடிப்படைப் பிரச்சினைகள் ஆகும்(ப.131). "செய்யுள் வழக்கைக் காட்டிலும் மரபிலக்கணக் கலைஞனுக்கு உயர்ந்தோர் வழக்கே இலக்கண உருவாக்கத்தில் பெரும் சவாலாக அமைகிறது. பெரும்பாலான நேரங்களில் உயர்ந்தோர் வழக்கின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் உரைகல்லாக மட்டுமே செய்யுள் வழக்கு அமைகிறது"(ப.132).

7.1.1.3. உரை

தொல்காப்பியம் மட்டும் இன்றி அதற்கு எழுதப்பட்ட உரைகளும் பிற்கால இலக்கணங்களுக்குப் பிரதி ஆயின. அதற்கு உதாரணமாகப் புணரியல் 11ஆம் சூத்திர இளம்பூரணர் உரை, நன்னூல் 152ஆம் சூத்திரத்திற்கு உள்ளீடாக அமைகிறது (ப.134). "எனவே, வழக்கு, உரை, செய்யுள் என்னும் அவற்றிற்கு இடையேயுள்ள உறவை மொழி வளர்ச்சியின் தொடர்பம் (continiuum) என்று கூறலாம்" (ப.136.) உரையும் ஒரு தரவாக அமைவது தெளிவாகிறது.

இலக்கணக் கொத்து தொல்காப்பிய உரைகளைக் கொண்டது. ஆசிரியரே "உளங்கூர் உரையாம் இளம்பூரணமும்/ ஆனா இயல்பில் சேனாவரையமும்/ உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியமும்/ மற்றமற்று இடப்பொருள் முற்றும் உணர்ந்தும்"(சிறப்புப் பாயிரம்,11-4) கூறுவதால் அறியலாம் (ப.116).

உரையாசிரியர்கள் சொல்லளவில் ஏற்பட்ட மாற்றங்களை வற்புறுத்தியே பிரயோக விவேகமும் இலக்கணக் கொத்தும் எழுதப்பட்டன(ப.133).

இலக்கணங்களிலிருந்து தத்துவ நெறியை வெளிக்கொணர்ந்த பெருமை உரையாசிரியர்களைச் சாரும்(ப.335).

இலக்கண உரைக்கும் இலக்கணக் கோட்பாட்டுக்கும் உறவு உடையது என்று படம் மூலம் விளக்கப்பட்டுள்ளது(ப.408).

7.1.2. வரலாற்று நிலையும் சமகால நிலையும்

இலக்கணம் ஒரு மொழியின் வரலாற்றுப் படிமுறை நிகழ்வைப் பதிவு செய்கிறது. அதுவே, இலக்கணமரபு, 'முன்னை மரபு' (உவமவியல் 23 பேராசிரியர் பாடம்), 'தொன்னெறி மரபு' (வேற்றுமை மயங்கியல் 18), 'வழக்கியல் மரபு' (வினையியல் 49) என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டவை இலக்கண மரபின் வரலாற்றுப் படிமுறை குறித்த கருத்தாக்கங்களே.

ஒரு சமூகத்தின் நடைமுறைகளால் உருவாகிக் கருத்தும் கற்பனையும் கலந்து கட்டமைக்கப்பட்டு, பிற்காலத் தலைமுறையினர்க்கும் வந்து சேருவதே 'மரபு'. அதனால் மரபு சார்ந்த இலக்கணமும் வரலாற்றுக் கூறுக்கு விதிவிலக்கு அன்று. எனவே, மரபிலக்கணம் மொழியின் ஒவ்வொரு விவரண நிலையிலும் வரலாறு என்னும் மூலக்கூறை இயல்பாகவே உட்கொண்டு விளங்குகிறது(ப.307). மரபிலக்கணங்களும் வரலாற்றுக் கூறைக் கருத்து நிலையிலும், மொழி நிலையிலும் 'உட்கொண்டு விளக்குகிறது' என்பது முக்கியமான கருத்து. 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்பது தொல்காப்பியம் (எச்சம்.56). 'பழையன கழிதலும் புதியன புகுதலும்/ வழுவல கால வகையி னானே' என்பது நன்னூல் (462). அதனால், இலக்கண உருவாக்கத்தில் பழைமைவாதப் போக்கையே இலக்கணக் கலைஞர்கள் மேற்கொள்வதால் வரலாற்றுப் பார்வை முக்கியத்துவம் பெறுகிறது. அதுவே, மொழியியலின் சமகால அணுகு முறையிலிருந்து மரபிலக்கணத்தை வேறுபடுத்தி அதன் தனித்துவத்தை நிலைநாட்டுகிறது. மரபிலக்கணத்தில் பேச்சு வழக்கை ஆராய்கின்றபோது விளக்கமுறையிலும் ஒரு வரலாற்றுச் சாயல் நீங்க முடியாத ஆளுமையாகப் படிந்து இருப்பதைக் காணமுடியும் (ப.308)

செய்யுள்-வழக்கு என்பதை வரலாற்று நிலை-சமகால நிலை என்பதன் இணை வரையறைகளாகக் கருதலாம். செய்யுள் மொழி சமகாலப் பயன்பாடு என்பதற்கு மேலாக மரபு வழி, சரியானதும், செவ்வியற் பாங்கு உடையதும் என வரலாற்றுப் பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிப் பயன்பாடு ஆகும். சமகால (பேச்சு) வழக்குக்கு இச்சிறப்பு இல்லை. இது செய்யுள் மொழி தழுவிய உயர்ந்தோர் பேச்சு வழக்காக இருக்கும் நிலையில் மட்டுமே இலக்கணக் கலைஞனின் பரிசீலனைக்குத் தகுதி பெறுகின்றது.(ப.309).

7.1.2.1.வரலாறு

வரலாற்றின் ஒரு வெளிப்பாடு முந்துநூல் காணும் மரபு, மரபிலக்கணத்தில் வரலாற்றுத் தன்மையை உறுதிப்படுத்தும் சான்று(ப.310). அது தொல்காப்பியப் பாயிரம், நன்னூல் (சிறப்புப் பாயிரம்), இலக்கண விளக்கம் (சிறப்புப் பாயிரம்) ஆகியவைகளில் பொதுவாகவும், முத்துவீரியச் சிறப்புப் பாயிரத்தில் 'அகத்தியர்நூல் வழி' என்று சிறப்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

முதல்நூல், வழிநூல் என்ற கருத்தமைவும் இலக்கண உருவாக்கத்தின் வரலாற்றுப் பண்பை உறுதி செய்கிறது(ப.312). மரபிலக்கணத்தின் பகுத்தறிவுவாதச் சார்பு வரலாற்றுச் சார்பை உறுதிப்படுத்தும் மற்றொரு கூறு (ப.313). தொல்காப்பியம் கூறும் 'தகுதி வழக்கு' (கிளவியாக்கம் 17) என்னும் கருத்தாக்கம் வளர்ச்சிப் படிநிலைகளாகப் பிற்கால இலக்கணங்களில் (நேமிநாதம்,(சொல். 10), நன்னூல் (267), இலக்கண விளக்கம் (168), முத்துவீரியம் (15,16,54) சுட்டப்படும் இயல்பைக் கூறலாம்.

முச்சங்க வரலாற்றைக் கூறும் களவியல் உரை ஒவ்வொரு சங்கத்தாருக்கும் முன்னை இலக்கணங்கள் அமைந்தவற்றைக் குறிப்பிட்டுக் கூறுகிறது. தலைச்சங்கத்தாருக்கு 'நூல் அகத்தியம் என்ப', என்றும்; இடைச்சங்கத்தாருக்கு 'நூல் அகத்தியமும் தொல்காப்பியமும்'... என இவை' என்றும்; கடைச் சங்கத்தார்க்கு 'நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப' என்றும் கூறும் முறை இலக்கண அமைப்புருவாக்கத்தில் வரலாற்றுச் செல்நெறியின் பிரதிபலிப்பாகும்' அதை, 'முந்தையோர் நூல்களில் பரவிக் கிடந்தவற்றையும், மறைந்து கிடந்தவற்றையும், வழக்கிடையில் அறியப் பெற்றவற்றையும் ஒருங்கு திரட்டி நூல் ஒழுங்குற அமைத்துச் செவ்விய வடிவில் வழங்கியமையே அவர் காலத்தால் செய்த ஞாலத்தின் மேம்பட்ட பணியாகும்' என்று எடுத்துக்காட்டப்பட்ட இளங்குமரனார் கருத்து இலக்கண உருவாக்கத்தைத் தெளிவாக விளக்குகிறது.

7.1.2.2. சமகால நிலை

வரலாறு சமகால என்னும் கருத்தியல் வாய்பாட்டின் இணைவரைகளாகச் செய்யுளையும் வழக்கையும் கருதலாம். செய்யுள் வரலாற்றுத்தன்மை உடையது. வழக்கு சமகாலத்தன்மை உடையது. (ப.314). இந்த இணைவரையை மொழியியலின் வரலாறு-சமகாலம் (Diachrony vs synchrony) என்பதோடு இணைக்கக் கூடாது (ப. 315). "வழக்கு சமகாலத் தன்மை ஒருபோக்குத் தன்மை உடைய தொடர்பம். இத்தொடர்பத்தில் செய்யுளில் கூடுதலாக உணரப்படும் வரலாற்றுத் தன்மையும், வழக்கில் கூடுதலாக உணரப்படும் சமகாலப் போக்கையுமே மனங்கொள்ள வேண்டும். இங்கு விவரணம்/விளக்கம் (description) என்பது இருநிலைக்கும் பொதுவானது" (ப.316).

"தமிழ் இலக்கண மரபில் வழக்கே கூடுதல் இயங்காற்றல் மிக்க பிரதி. அதை ஒட்டியே, தொல்காப்பியத்திற்குப் பின்னர் வீரசோழியம் வடமொழி இலக்கண மரபைப் பிரதியின் ஒரு பகுதியாக இணைத்துக் கொண்டதும், பிரயோகவிவேகம் வடமொழி இலக்கணத்தைத் தமிழில் கூற முனைந்ததும் சமகாலமொழி வழக்குக் கட்டாயத்தின் மாற்றங்கள். பிற்காலத்தில் ஐந்திலக்கண மரபு உடைத்து; ஓரிலக்கணமரபாகச் சொல்லுக்கு மட்டும் எழுதப்பட்டதும் சமகால வழக்கின் கூடுதலான சமூக இயங்காற்றல் கருதிய வளர்ச்சி ஆகும்" (ப.317) "முடிப்பாக, மரபிலக்கணத்தின் பிரதியான வழக்கும் செய்யுளும் நிலையானவை அல்ல. இவை, காலந்தோறும் மாறி வருவன. இவற்றின் மெய்மைகள் இயல்பாகவே வரலாற்றுத் தன்மை நிறைந்தவை. இவ் வரலாற்றுத் தன்மையோடு அந்தந்தக் காலச் சமூகப் பண்பாட்டு மாற்றங்களையும் ஏற்று வளர்வன. இதன் விளைவாக மொழிப் பொருண்மை மாற்றங்களும் வளர்ச்சியும் இலக்கண உருவாக்கத்தில் தனி இடம் பெறுகின்றன. ஒரு மொழி பேசும் சமுதாயம் இம் மாற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் பொறுப்பு ஆவதால் சமுதாயமே பிரதியை உருவாக்குகிறது. இதன் மறுதலையாகப் பிரதி சமுதாயத்தை உருவாக்குகிறது. இதனால் பெரும்பாலான நேரங்களில் பிரதி கையாளுவதற்கு அவ்வளவு எளிமையாக அமைவது இல்லை" (ப.317) என்று கூறிய கருத்து கவனத்துக்கு உரியது.

7.2.மொழி அமைப்பு

மொழி அமைப்பு என்னும்போது ஓர் அமைப்பு ஒழுங்கு உடையது ஒரு அடிப்படைக் கருத்து. அந்தக் கருத்தமைவே கருத்தாடலுக்கும் மொழி ஆய்வுக்கும் அடிப்படை. கருத்தாடல் நோக்கில் பேசுவோர்-கேட்போர் எப்படி மொழி அமைப்பை உள்வாங்கிக் கொள்கிறார்கள் என்பதன் கருத்தாக்கமே பகுத்தறிவு வாதம்/அனுபவ வாதம் என்பது. எனவே, மொழி அமைப்பைப்பற்றிய கருத்து என்பதால் மொழி அமைப்பு ஓர் அமைப்பு ஒழுங்கு, பகுத்தறிவு வாதம்/அனுபவ வாதம் என்ற இரண்டும் மொழி அமைப்பு என்ற தலைப்பின் கீழ் விளக்கப்படுகிறது.

7.2.1. மொழி அமைப்பு ஓர் அமைப்பு ஒழுங்கு

மொழிஅமைப்பு, ஓர் அமைப்பு ஒழுங்கு உடையது என்ற கருத்தாக்கம் மொழியியலாளர் வற்புறுத்துவது. மரபு இலக்கண ஆசிரியர்கள் அதை நேரடியாகக் குறிப்பிடவில்லை. ஆனால், அவர்கள் வருணனையிலிருந்து ஒழுங்கமைவு விதிகள் முதலிலும் ஒழுங்கமைவு பிறழ்வு விதிகள் அடுத்தும் விளக்கப்பட்டுள்ளது புலனாகிறது.

கிரேக்க மொழியில் ஒரு சொல்லின் வடிவத்துக்கும் அது உணர்த்தும் பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய சிந்தனை காணப்படுகிறது. எல்லாச் சொற்களின் வடிவமும் அவை உணர்த்தும் பொருளோடு, இயற்கையோடு பொருந்தும் இயல்பின என்ற கருத்து முதலில் தோன்றியது. அது எல்லாச் சொற்களுக்கும் பொருந்தாது என்றும் பின்னர் உணரப்பட்டது. இந்தக் கருத்தாக்கம் மறைமுகமாக மொழியின் ஓர் ஒழுங்கமைவையும் (regularity), ஒழுங்கமைவிலிருந்து விலகிச் செல்லும் பிறழ்வையும் (irregularity) உணர்த்தியது. இதனை ஒட்டியே ஒழுங்கமைவு மற்றும் ஒழுங்கமைவுப் பிறழ்வு விதிகளால் ஆனது என்னும் கருத்தாக்கம் உருவானது.

இந்தக் கருத்து தொல்காப்பிய வருணனை மூலமே அறிந்து கொள்ளமுடிகிறது. “இருதிணைப் பிரிந்த ஐம்பால் கிளவிக்கும் /

உரியவை உரிய பெயர்வயி னான' என்று முதலில் குறிப்பிட்டு (பெயரியல் 7) அவன், இவன், உவன் என வரூஉம் பெயரும்.... அவள், இவள், உவள், என வரூஉம் பெயரும்'... அப்பதினைந்தும் / பாலறி வந்த உயர்திணைப் பெயரே" என்று கூறியது ஒழுங்கமைவு அமைந்ததைப் புலப்படுத்துகிறது. "ஆண்மை அடுத்த மகன் என் கிளவியும்/பெண்மை அடுத்த மகள் என் கிளவியும்/பெண்மை அடுத்த இகர இறுதியும் .. அப்பதினைந்தும் அவற்றோ ரன்ன" என்பதில் உயர்திணை உணர்த்துவதில் முழு ஒழுங்கமைவு இல்லை என்பதை 'அவற்றோ ரன்ன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "எல்லோரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்/ எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்/ பெண்மை அடுத்த மகன் என்கிளவியும்/ அன்ன இயல" என்ற அடுத்த சூத்திரத்தில் ஒழுங்கமைவு இல்லை என்பதை 'அன்ன இயல' என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது கவனத்துக்கு உரியது.

அளவுப் பெயர்கள், நிறைப் பெயர்கள் சாரியை ஏற்பதைப் பற்றி விளக்கும்போது முதலில் "உயிரும் புள்ளியும் இறுதியாகி / அளவும் நிறையும் எண்ணும் சுட்டி/ உள எனப்பட்ட எல்லாச் சொல்லும்/ தத்தம் கிளவி தம்மகப் பட்ட/ முத்தை வரூஉம் காலந் தோன்றின் / ஒத்த என்பது சாரியை" என்று கூறியது (தொகை மரபு 22) பொதுவிதி. அதாவது ஒழுங்கமைவு விதி. 'அரையென வரூஉம் பால்வரை கிளவிக்குப் /புரைவ தன்றாற் சாரியை இயற்கை' என்ற அடுத்த சூத்திரம் அரை என்ற பெயர் ஏகாரச் சாரியை ஏற்காது (உழக்கரை(உழக்கு+அரை) என்பதை உரையாசிரியர்கள் எய்தியது விலக்கல் என்று கூறியுள்ளார்கள். அதுதான் ஒழுங்கமைவுப் பிறழ்வு விதி.

'குறையென் கிளவிமுன்வரு காலை/நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை' என்ற அடுத்த சூத்திரத்தை (கலக்குறை) உரையாசிரியர்கள் எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறல் என்று விளக்கியுள்ளார்கள். ஒழுங்கமைவுப் பிறழ்வு விதிகள் பல உண்டு என்பதை அறியலாம்.

மொழி மெய்மைகள்

ஒழுங்கமைவு விதிகள்
↓
ஒழுங்கமைவுப் பிறழ்வு விதிகள் 1

ஒழுங்கமைவுப் பிறழ்வு விதிகள் 2

.... 3

.... 4

ஒழுங்கமைவு விதிகள், ஒழுங்கமைவுப் பிறழ்வு விதிகள் என்பவை விதிகளாலான ஒரு அமைப்பொழுங்கு என்று பொதுமைப் படுத்தப்படுகிறது.

தொல்காப்பியம் (எச்சம்.2.2) 'செந்தமிழ் நிலத்து வழக்கை' 'இயற்சொல்' பொது நிலைவழக்கு (standard dialect) என்பதை உணர்த்துகிறது

மொழி, விதிகளால் ஆனது. அவற்றுள், ஒழுங்கமைவு விதிகளும், ஒழுங்கமைவுப் பிறழ்வு விதிகளும் அடங்கும். அதை இன்னும் பொதுமைப்படுத்தி மொழி அமைப்பொழுங்கு உடையது என்று கூறலாம். மரபிலக்கணங்கள் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் மொழியியலில் அமைப்பு (structure) என்பது இந்தச் சிந்தனையைத் தழுவிய கருத்தாக்கமே.(ப.364)

7.2.2.பகுத்தறிவு வாதமும் அனுபவ வாதமும்

மொழிப் பகுப்பாய்வு பற்றிய ஆழமான மன உணர்வு காட்டும் உளவியல் சார்பான கருத்தாக்கத்தை மொழியியல் அறிஞர்கள் 'மொழிப் பகுத்தறிவு வாதம்' என்று குறிப்பிடுவர். எல்லா மொழிகளின் அடிப்படைப் பகுப்பாய்வுகளுக்குப் பொதுவான ஒரு இலக்கணத் தன்மை உள்ளது என்றும் இப்பொதுப்பகுப்பாய்வுக் கூறு மனிதனின் பகுத்தறியும் அறிவு சார்ந்தது என்று முதலில் தத்துவ நெறியாளர்கள்

நம்பினார்கள். அது, பதினேழாம் நூற்றாண்டில் மொழியியல் மனச்சார்பு (mentalistic) என விளக்கம் பெற்றது. அதன் அடிப்படையில் பொ.ஆ1660இல் எழுதப்பட்ட போர்ட் ராயல் இலக்கணம் (Port Royal Grammar) என்பது பிரெஞ்சு அறிஞர் குழுவால் எழுதப்பட்டது. அதனால் மொழிஅறிவு மட்டும்இன்றி, மனிதனின் பிற அறிவுசார் வளர்ச்சியும் அவனது பகுத்தறியும் திறனையும் அடிப்படையாகக் கொண்டது என்னும் பகுத்தறிவு வாதம் முன்மொழியப்பட்டது.

∴.பெர்டினணண்ட் டி சசூர் (Ferdinand de Saussure) மொழிக் கருத்தீட்டுத் திறன் (la langue) பேச்சுத் திறன் (la parole) என்று பாகுபடுத்தி மொழிக் கருத்தீட்டுத் திறன் = மொழியின் அக அமைப்பு மூளையின் ஒரு பகுதி, ஓரமைப்பாகச் சேர்ந்துள்ள சமூகக் கூறு, பேச்சுத் திறன் = பேச்சு; மொழியின் கருத்தீட்டுத் திறனை விளக்குவதே மொழியியலின் நோக்கம் என்று விளக்குகிறார். எனவே, இது அனுபவ வாதம் (mentalist) என்று குறிப்பிடப்படுகிறது.

அதே சமயத்தில், 'பேச்சு' ஆழமான விவாதத்துக்கு உள்ளானபோது மனிதனது எல்லா அறிவும் அவனது அனுபவங்களாலேயே பெறப்படுகிறது என்ற அனுபவ வாதம் பகுத்தறிவு வாதத்துக்கு எதிராக முன் வைக்கப்பட்டது. அவை இலக்கண ஆய்விலும் தாக்கத்தை ஏற்படுத்தின.

மொழியியலில் அமைப்பு மொழியியல் (structural grammar) அனுபவ வாதத்தையும், ஆக்க மாற்றிலக்கணம் (transformational grammar) பகுத்தறிவு வாதத்தையும் சார்ந்தது. பிற்கால ஆய்வால் பகுத்தறிவுவாதம்-அனுபவவாதம்- வாய்பாட்டின் இடைவெளி சுருங்கிவிட்டது.

ஆக்க மாற்றிலக்கணத்தார் கூறும் வாக்கியங்களின் புதைநிலை அமைப்பும் (deep structure) அதன் மொழி மாற்றுகளும் (transformations) ஒரு மொழியின் அமைப்பாக்கக் கூறுகளாகச் சோம்ஸ்கி விளக்குவார். அது, அனுபவவாத சார்பு உடையது என்றும், அமைப்பு வாத மொழியிலார் கூறும் மொழியின் அமைப்பொழுங்கு,

கூடுதலான பகுத்தறிவு வாதம் உடையது என்றும் லாக்கோப் (Lakoff) கூறுகிறார். எனவே, அனுபவவாதச் சார்பின்றி பகுத்திறவுவாதமோ, பகுத்தறிவுவாதச் சார்பின்றி அனுபவவாதமோ, தத்தம் நிலைப்பாட்டை எந்த நிலையிலும் தனித்து நிறுத்தமுடியாது.... இலக்கணக் கோட்பாட்டாக்கம், பகுத்தறிவு வாதமும் அனுபவ வாதமும் இணைந்த அணுகுமுறையால் மட்டுமே சாத்தியம் ஆகிறது என்னும் கருத்து இன்று வலுப்பெற்றுள்ளது.

தமிழ் இலக்கணங்கள் பகுத்தறிவு வாத அணுகுமுறையைச் சார்ந்தது. அது செய்யுள் வழக்கைச் சார்ந்தது என்பது போல் அமைகிறது. மாறாக, இலக்கணத்தின் பேச்சு வழக்கு அனுபவவாதத்தைச் சார்ந்தது(ப.340)

இலக்கண விளக்கத்தில் மொழி மெய்மை (தரவு) பிரதியைச் சார்ந்தது என்பதைவிட, இலக்கணக் கலைஞனின் பகுப்பாய்வுத் திறனைச் சார்ந்தது என்பதே பொருந்தும். இலக்கணம் முழுமை பெறுவது இலக்கணக் கலைஞனின் பகுத்தறிவுவாத அணுகுமுறையில்தான்; அது, அகச்சார்பு உடையது. எனவே, மரபிலக்கண உருவாக்கம் அனுபவவாதத்தால் தூண்டப் பெற்றாலும், அதன் பகுப்பாய்வு பகுத்தறிவால் முழுமை பெறுகிறது. (ப.341)

ஒவ்வொரு குழந்தையும் மொழியை இயல்பாகக் கற்கும் திறனோடு பிறக்கிறது என்பதும், மிகக் குறுகிய காலத்திலேயே பல்வேறு சமூகச் சூழல்களில் எண்ணிறந்த புதிய வாக்கியங்களைப் படைக்கும் படைப்பாக்கத் திறனையும் அவற்றைப் புரிந்துகொள்ளும் திறனையும் பெற்றுவிடுகிறது என்பதும் சோம்ஸ்கியின் கருத்து. அது, பகுத்தறிவு வாத அடிப்படை. ஆனால் குழந்தை, சமூகத்தின் ஓர் அங்கமாய்ப் பலவற்றைப் புரிந்து அவ்வனுபவ அறிவையும் பயன்படுத்தித் தன் கருத்துகளைப் புலப்படுத்துகிறது என்பதைத் தம் கோட்பாட்டின் பகுதியதாகக் கருதவில்லை. எனவே, மொழிப் பயன்பாட்டு அறிவை விளக்க மற்றொரு கோட்பாட்டு உருவாக்கம் தேவை என்று ஹைம்ஸ் என்ற அறிஞர் வலியுறுத்தினார்.

பகுத்தறிவு வாதம்-அனுபவ வாதம் = மரபிலக்கணம்

கருத்தீட்டுத் திறன்-பேச்சுத் திறன் = அமைப்பு மொழியியல்

மொழி அறிதிறன்-மொழிச் செயல்பாட்டுத் திறன் = ஆக்க மாற்றிலக்கணம்

கருத்துப் புலப்பாட்டுத் திறன் (ஹைம்ஸ்)= கருத்தாடல் பகுப்பாய்வு (Discourse anyalysis)

தமிழ் மரபிலக்கணத்தில் பகுத்தறிவு வாதத்தை முதலில் வெளிக் கொணர்ந்தவர்கள் உரையாசிரியர்கள்.

7.2.3.ஒப்புமையாக்கத்தின் வழிக் கற்றல்

மொழி கற்றல் (ஈட்டம்) பற்றிய நிலைப்பாடே, இலக்கணக் கோட்பாட்டைப் பகுத்தறிவுவாதச் சார்பு உடையது என்றோ, அனுபவ வாதச் சார்பு உடையது என்றோ என்பதைக் கணிக்கமுடியும்.

குழந்தை, ஒரு மொழி பேசும் சமூகத்தில் வாழ்கிறது. தன்னைச் சுற்றிலும் உள்ளோர் பேசுவதைக் கேட்கிறது. அப்பேச்சைக் கேட்டுத் தன்னிடம் இயல்பாக உள்ள மொழி கற்கும் திறனைப் பயன்படுத்திப் பகுத்தாராய்ந்து பின்னர் விதிகளாக்கித் தன்னகப்படுத்திக் கொள்கிறது. பகுத்தறிவைப் பயன்படுத்திக் குழந்தை, மொழி கற்கிறது என்போரைப் பகுத்தறிவுவாதிகள் (rationalists) என்பார். பிறர் பேச்சை அப்படியே போலச் செய்யும் (imitation) நடத்தைவழிக் குழந்தை, மொழி கற்றுக்கொள்கிறது என்போரை அனுபவ வாதி (empiracists) என்பார். முன்னவர் மொழியை விதிகளால் ஆனது என்றும், பின்னவர் பேச்சுத் தொகுதிகளால் ஆனது என்றும் கருத்து உடையவர்கள். மேலும் முன்னது, ஆக்க இலக்கணத்தின் நிலைப்பாடு; பின்னது, அமைப்பியல் இலக்கணத்தின் நிலைப்பாடு.

'மரபிலக்கணம், குழந்தையின் மொழிக் கல்வி ஒப்புமை ஆக்கத்தின் வழி நிறைவேறுகிறது' என்று கருதுவதாக நூல்(ப.325) கருதுகிறது. அதற்கு ஆதாரமாக "மரபிலக்கணங்களின் ஒழுங்கமைவு

விதிகளும் ஒழுங்கமைபு பிறழ்வு விதிகளும் ஒப்புமையாக்கப் படிமுறையை மூல நிகழ்வுகளாகக் கொள்வதைப் பிரதிபலிப்பாக" (ப.330) தமிழ் உதாரண விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் மரபிலக்கணங்கள் குழந்தை கற்றல் முறையைப் புலப்படுத்தவதாகக் கொள்ள முடியுமா என்று ஐயம் எழுகிறது.

உண்மையில் குழந்தை ஒப்புமையாக்கத்தின் வழி, கற்றல் என்பதே முன்னரே கூறிய இலக்கண மீக்கோட்டுக் கூறுகளைக் கொண்டது.

தொடர்ந்து விவாதிக்கப்பட்டுள்ள கருத்துகள் இலக்கண வருணனை சார்பான வரலாற்று வளர்ச்சிக் கருத்துகளை விளக்குகிறது. 1. அரிஸ்டாட்டிலியன் தருக்க வாதத்தில் விதிதருமுறை வாதம் (syllogism), பின்வந்த இலக்கணக் கலைஞர்கள் விதிதரு வாதத்தை இலக்கண உருவாக்கத்தில் பயன்படுத்தியது. 2) கிரேக்க மொழி இலக்கணத்தில் உருபனியல் சார்புடைய இலக்கணத்துக்கு மாறாகத் தொடரியல் சார்புடைய இலக்கண கிரேக்க இலக்கண ஆசிரியர் த்ராக்ஸ் (பொதுஆண்டு மு2ஆம் நூற். உருவாக்கினார். 3) விதியாக்க முறை இலக்கண அணுகுமுறை வாக்கியங்களையே மூலமொழி மெய்மைகளாகப் பகுப்பாய்வுக்கு ஏற்றது. அதனால், பகுப்பாய்வு சார்புடைய கூடுதல் ஆக்கத் திறன் உடையதாக அமைவது தருக்க ரீதியிலான உண்மை. 4) பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட பொதுஆண்டு17ஆம் நூற்றாண்டு எழுதப்பட்ட போர்ட் ராயல் இலக்கணம், தருக்க வாதத்தை ஏற்று எழுதப்பட்டது. சோம்ஸ்கி தம்முனுடைய ஆக்க மாற்றிலக்கணத்தின் மூல தத்துவத்தை இந்த இலக்கண மரபிலிருந்து பெற்றார். மேலும், குழந்தை மொழியாக்கத் திறனைப் பயன்படுத்தி விதிகளை மொழியைக் கற்கிறது என்று சோம்ஸ்கி கருதுகிறார். 5) தமிழ் மரபிலக்கணங்கள் வாக்கிய நிலையையும் தாண்டி கருத்தாடல் நிலையில் பல இலக்கணக் கூறுகளை விளக்கியுள்ளது. அதற்குச் 'செப்பே வழீஇ யினும் வரைநிலை இன்றே/அப்பொருள் புணர்ந்த கிளவி யான' என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரமும் (சொல்.கிளவியாக்கம் 15) பிறவும் நல்ல சான்று (சண்முகம், 2018).

6) இறுதியாகப் "பகுத்தறிவு வாதத்தையும் மொழிப் பொதுமைகளையும் இயல்பாகவே ஏற்பன மரபிலக்கணங்கள். மொழியாக்கத் திறனுக்கும் மொழிப் பயன்பாட்டின் படைப்பாக்கக் கூறுக்கும் இடையே உள்ள எல்லைக்கோடுகள் மரபிலக்கணத்திற்குத் தேவை அற்றது என்பதை ஏற்றுக்கொண்டால் ஒட்டுமொத்த மொழியாக்கத்தின் முந்தைய வடிவமே ஒப்புமையாக்கம் என்பதையும் இவ்வொப்புமையாக்க வழி, குழந்தை மொழியைக் கற்கிறது என்ற நிலைப்பாட்டையே மரபிலக்கணங்கள் மேற்கொண்டுள்ளன என்று உறுதிப்படுத்தலாம்" (ப.334) என்பது முடிவுரை. அதாவது, குழந்தை மொழியைக் கற்றல் இலக்கண உருவாக்க முறைக்கு வழி காட்டியாக உள்ளது என்று பொருள். எனவே, இலக்கண உருவாக்கத்தில் இந்த மீக்கோட்பாடு ஒப்புமையாக்கம் என்று கொள்வதே பொருத்தமாக இருக்கும்.

7.3. வருணனை அணுகுமுறை

7.3.1. விதிமுறை - விளக்கமுறை

தத்துவார்த்த நெறிகளையும் தருக்க வாதங்களையும் ஒட்டி, மொழி அமைப்பைக் காணும் நிலையில் உருவானது என்பது இலக்கணவியலை விதிமுறை அறிவியல் (prescriptive science) என்று கருதும் கருத்தாக்கம். மரபிலக்கணக் கலைஞன், செய்யுள் பிரதியின் இலக்கிய மொழி முதன்மையானது என்றும், பேச்சு மொழியைக் காட்டிலும் சரியானது என்றும், தூய்மையானது என்றும் (ப. 77) கருதியே, மொழி பேசப்படும்போதும், எழுதப்படும்போதும் இப்படித்தான் கையாளப்பட வேண்டும் என்பதை மரபிலக்கணங்கள் விதிகளாகக் கூறுகின்றன. அதனால், மரபிலக்கணங்கள் விதிமுறை இலக்கணம் என்று குறிப்பிடப்படுகிறது. விதிமுறை இலக்கணம் சமுதாய மொழியியல் பிரச்சினை சார்பு உடையது.

"விதிமுறை, விளக்கமுறைக்கு இணையான எதிர் அணுகுமுறை அன்று. விளக்கமுறையிலிருந்து மொழியை நேரடியாகச் சமூகப் பயன்பாட்டிற்கு எடுத்துச் செல்லும் ஓர்ஊடகமாக விதிமுறை இலக்கணம் செயல்படுகிறது. விதிமுறை விளக்கமுறையிலிருந்து வருவித்துக்கொண்டது"(ப.380)

மொழியியல் இலக்கணம், மொழி விளக்கத்தை முதன்மை நோக்கமாகக் கொண்டது. அதனால், அது, விளக்கமுறை இலக்கணம் (descriptive grammar) என்று குறிப்பிடப்படுகிறது(ப.77)

ஆனால், எந்த ஒரு மரபிலக்கணத்தையும் முழுவதுமாக விதிமுறை இலக்கணம் என்றோ, விளக்கமுறை இலக்கணம் என்றோ எளிதாகப் பகுத்துக் கூறமுடியாது(ப.367)

"மரபிலக்கணத்தின் மேம்பட்ட வளர்ச்சி நிலை குறிப்பிட்ட சமகால மொழிப் பயன்பாட்டோடு இலக்கணத்தைப் பொதுமைப்படுத்தி விளக்க முறையில் விதிமுறையை நாகரிகமாக வலியுறுத்தியது எனலாம். இவ்வளர்ச்சியை மரபிலக்கணப் பரிணாம வளர்ச்சியின் முதிர்வு நிலை என்று கூடக் கூறலாம்" (ப.367). எனவே, மரபிலக்கணங்களை விளக்கமுறை இலக்கணம் என்று கொள்வது சிறப்பு ஆகாது.

7.3.1.1.வரலாற்று நோக்கு

மரபு இலக்கணங்கள் விதிமுறை இலக்கணங்களே. வடமொழியில் சிக் ஷைகளும் பிராதிசாக்கியங்களும் விதிமுறை இலக்கணங்கள் ஆகும். கிரேக்க லத்தீன் மரபிலும் பழைய செம்மொழி இலக்கியப் பிரதிகளில் காணப்பட்ட பிழைகளை நீக்கும்பொருட்டே எழுதப்பட்ட இலக்கணக் குறிப்புகள் முதலாவது தோன்றிய விதிமுறை இலக்கணங்கள் ஆகும்.

'மரபிலக்கணத்தின் பரிணாம வளர்ச்சியில் விதிமுறையை முதற்கட்டமாகவும் மூலமுதற் பொருளாகக் கொண்ட மரபு சார்ந்த விளக்கமுறையை அடுத்த கட்டமாகவும் கூறலாம். மொழியியல் விளக்கமுறையில் இவ்வித முறைப் பண்பிற்கு இடம் இல்லை' (ப.369).

.. .. (தொடரும்)

உலகப் பண்பாட்டில் திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

முனைவர். உ.கருப்பத்தேவன்,
உதவிப்பேராசிரியர் & தலைவர் (பொ),
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை -21.
செல் : 94892 41776

மனித வாழ்க்கை நாகரிகம் உடையதாக அமைய வேண்டும். நாகரிகம் என்பது உலகை இடையறாது உய்த்து நடத்தும் ஒரு சிறப்புடைய உணர்வு வழிப்பட்ட ஒழுக்கமாகும். இந்நாகரிகமே உடலில் கலந்து உயிரில் ஒன்றி உணர்வை மேம்படுத்தி வாழ்க்கையின் விளக்கமாக அமைவது என்பதே வள்ளுவச் சிந்தனையாகும்.

வறுமை ஒழிப்பு

ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பது வறுமையாகும். ஔவையார், ‘கொடிது கொடிது வறுமை கொடிது’ என்றார். இதனை, வள்ளுவம் உலக மக்களின் வாழ்க்கைத் தீமைகளில் முதன்மையானது நல்குரவு. ‘நல்குரவு’ என்பது வறுமை. உண்பன, உடுப்பன இன்றி மக்கள் துன்புறுவதே வறுமை. ஒரு நாட்டின் நல்குரவு அந்த நாட்டின் வளத்தைக் குறைக்கும். வறுமை ஒழுக்கக் கேடுகளை உருவாக்கும். பண்பாட்டைச் சீரழிக்கும். இதனை, வள்ளுவம்,

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது (1041)

என்கின்றது. வறுமை, இம்மை மற்றும் மறுமை வாழ்வினைக் கெடுக்கும். எனவே, வறுமையை ஒழிக்கும் உலகப் பண்பாட்டுச் சிந்தனையை வள்ளுவம் இக்குறட்பாவில் உணர்த்துவது அறியத்தக்கதாகும்.

சுரண்டிப் பொருள் சேர்த்தல்

அன்றும் இன்றும் உலகெங்கும் உழைப்புச் சுரண்டலே சமூகப் பொருளியல் வளர்ச்சியாக ஏற்கப் பெற்றுள்ளன. சுரண்டும் பொருளாதார அமைப்பினை மார்க்சியம் அடியோடு மாற்ற விழைகின்றது. வள்ளுவமும் சுரண்டும் பொருளாதார அமைப்பைச் 'சலத்தால் பொருள் செய்தல்', 'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம்' என்றெல்லாம் கூறி மறுக்கின்றது.

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலந்துள்நீர் பெய்திரீஇ யற்று" (660)

மார்க்சியம், பொருள் உற்பத்தி செய்யும் தொழிலையே சிறந்த தொழில் என வலியுறுத்தும். வள்ளுவமும்,

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று (753)

செய்க பொருளை செறுநர் செறுக்கறுக்கும்
எ∴கதனிற் கூரிய தில் (759)

எனப் பொருளுற்பத்தியை வலியுறுத்துகின்றது. அதே வேளையில் சுரண்டல் பொருளாதாரத்தைச் சாடுகின்றது.

முடிவுரை

இவ்வாறு உலகப் பண்பாட்டுச் சிந்தனைகளின் பன்முகப் பரிணாம வளர்ச்சிக் கொள்கைகளின் அடிப்படையில் வள்ளுவத்தை அணுகும் வாய்ப்பு உள்ளது. நாடு, மொழி, இனம் கடந்து உலக மக்களின் பண்பாட்டு விழுமியங்களைப் பாங்குடன் எடுத்துக்காட்டும் உலகப் பண்பாட்டு விளக்க நூலாகவும் திருக்குறள் அமைந்திருப்பதைத் தக்க சான்றுகள் வழி இந்த ஆய்வுக் கட்டுரையில் விளக்கப் பெற்றுள்ளன.

பயன்பட்ட நூல்கள்

1. திருக்குறள், பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1970.

2. இரா.இளங்குமரனார், திருக்குறள் வாழ்வியலுரை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை,1999.

3. இ.மோகனராசு, காலந்தோறும் திருக்குறள் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2007.

4. அ.சக்கரவர்த்தி நயினார், திருக்குறளும் சமதர்மமும், முத்தமிழ்நிலையம், சென்னை,1947.

5. கு.அருணாசலக்கவுண்டர், வழிகாட்டும் வள்ளுவர், அருணகிரி இசைக்கழக வெளியீடு, நெல்லை, 1954.

6. சி.இலக்குவனார், குறள்நெறி, இலக்கியப் பண்ணை, புதுக்கோட்டை, 1954.

7. பரணி, திருவள்ளுவர் ஒரு புரட்சிக்காரர், கஸ்தூரி பதிப்பகம், திருச்சி, 1954.

8. வ.சுப.மாணிக்கம், வள்ளுவம், பாரிநிலையம், சென்னை, 1958.

9. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், வள்ளுவர் கண்ட நாடும் காமமும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1954.

10. கி.ஆ.பெ.விசுவநாதம், வள்ளுவமும் குறளும், பாரிநிலையம், சென்னை, 1953.

11. வ.சுப.மாணிக்கம், திருக்குறள் சுடர், மணிவாசகர் பதிப்பகம், சென்னை,1987

12. குன்றக்குடி அடிகளார், திருக்குறள் காட்டும் அரசியல், கலைவாணி புத்தகாலயம், சென்னை, 1972

13. சி.சு.பெருமாள், திருக்குறள் அரசியல் தெளிவு, பல்கலைப் பழந்தமிழ், சென்னைப் பல்கலைக்கழகம், 1974.

14. தி.முருகரத்தினம், வள்ளுவர் வகுத்த பொருளியல், மதுரைப் பல்கலைக்கழகம், 1975.

15. கா.அப்பாத்துரை, திருக்குறள் மணிவிளக்க உரை, சென்னை, 1967.

16. அ.மு.பரமசிவானந்தம், வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறி, தமிழ்க்கலைப் பதிப்பகம். சென்னை, 1967.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வரலாறு

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் நாட்டுணர்வு, மொழி உணர்வு, சமுதாயப் பொருளாதார உணர்வு குறித்த விழிப்புணர்ச்சி நாட்டு விடுதலைக்கும் மொழி வளர்ச்சிக்கும் தோற்றுவாய் செய்தது.

திண்ணைப் படிப்பாக ஆங்காங்கு தமிழ்க் கல்வி, நிலை குலைந்து புலவர் நாவில் மட்டும் தவழ்ந்து வந்தது. நாட்டு மக்கள் மொழியாகிய தமிழை அந்நியர் புறக்கணித்தனர். தமிழ்க் கல்விக்கு நிறுவனம் அமைத்த மதுரையில் அறிஞர் பெருமக்கள் கல்விக்குழுவை அமைத்து "மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்" நிறுவிய பெருமை முகவை சேதுபதி அரச குடும்பத்தையும், அவர்களுக்கு அப்பெருமை சேர்த்த அருங்குணச் செல்வர் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்களையும் சார்ந்தது. அதனை நினைந்து போற்றும் கடப்பாடு தமிழ்கூறும் நல்லுலகிற்கு என்றும் உண்டு. தமிழகத்தின் பிற்பகுதி அரசகுடும்பத்தினையும் பொருள் வளம் நிறைந்த செல்வர்களையும் கல்வியாளர்களையும் இணைத்துத் தமிழ் வளர்த்த அப்பெருமக்கள் வரலாறு தமிழ் வரலாற்றோடு இணைந்தது. அதனை இனிவரும் சந்ததியினருக்கு உணர்த்தும் வகையில் வரலாற்றைப் பேணி நூல்வடிவில் முழுமையான நூல் ஒன்று வெளியிட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

பழைய வரலாறு அறிந்த தமிழ்ப்பெருமக்கள் அருகிவரும் காலகட்டத்தில் அவற்றைத் தொகுத்து வெளியிட்டு, தமிழ்

பாதுகாக்கப்பட்ட வரலாற்றை உலகிற்கு உணர்த்தும் வகையில் நூல் வெளியிட வேண்டும்.

அதற்குரிய கட்டுரைகள், ஆவணங்கள், கடிதங்கள், கல்வெட்டுச் செய்திகள், பிற ஏடுகள், இதழ்களில், நூல்களில் வெளிவந்த செய்திகளை அனுப்பி வரலாற்றை நிறைவு செய்ய தங்கள் உதவியை வேண்டுகிறோம்.

ஈராயிரம் ஆண்டு பழமை வாய்ந்த தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பேணிப் பாதுகாக்கவும் அதனைப் போற்றிக் கற்று வளர்க்கும் ஆசிரிய மாணவர் பரம்பரையை உருவாக்கிய நம் முன்னோர் பெருமித வாழ்வை மீண்டும் மீண்டும் சிந்திக்க வேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு.

அக்காலத்தில் பாண்டித்துரைத்தேவருடன் பணியாற்றிய பெருமக்கள் சம காலத்துப் புலவர்கள் ஆற்றிய பணிகள், தமிழ்ச்சங்கத்தில் பயின்று தமிழ்ப்பணி செய்த கல்வியாளர்கள் மற்றும் உ.வே.ச., வ.உ.சி., கோவைத் தமிழறிஞர் பெரியபுராண உரையாசிரியர் சி.கே.சுப்பிரமணிய முதலியார் போன்ற அறிஞர்களும் நினைவுகூறத்தக்கவர்கள். நூல் ஒரு தமிழ்க் களஞ்சியம் போல வெளிவரத் தமிழறிஞர்கள் கட்டுரை அமைத்து அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

பதிப்பாசிரியர்

சனவரி திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

சி.வை.தாமோதரம் பிள்ளை (சன.1)

தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் (சன.2)

பிரமிள் (சன.6)



வெ.சாமிநாத சர்மா (சன.7)

அரசஞ் சண்முகனார் (சன.11)

தேவநேயப் பாவாணர் (சன.15)

ஆனந்தரங்கம் பிள்ளை (சன.16)

கரிச்சான் குஞ்சு (சன.17)

சாமி சிதம்பரனார் (சன.17)

ம.ப.பெரியசாமித் தூரன் (சன.20)

இராமலிங்க அடிகள் (சன.30)

அகிலன் (சன.31)

பதிப்பாசிரியர்: **பேராசிரியர் இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **தி.முருகரத்தினம்**

முனைவர் **இராம.சுந்தரம்**	முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **ம.திருமலை**	முனைவர் **மு.மணிவேல்**
முனைவர் **இ.மறைமலை**	முனைவர் **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் **செ.கந்தசாமி**	முனைவர் **இ.கி.ராமசாமி**
முனைவர் **பெ.சுயம்பு**	முனைவர் **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

தமிழ்ச்சங்க மாதிரித் தேர்வு அறிவிப்பு

மதுரை, நான்காம் தமிழ்ச் சங்கத்தால் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும், கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாகத் தமிழ்ப்பாட மாதிரித் தேர்வு சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டுமுதல் மாநிலப் பாடத்திட்டத்தில் கூடுதலாகப் பதினொன்றாம் வகுப்பிற்கும், மத்தியப் பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கும் மாதிரித் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணாக்கர்களுக்கு சங்கத்தால், சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ், மாணாக்கர்களுக்கு எதிர்காலத்தில் பெரும் பயனுள்ளதாக அமையும். இந்த ஆண்டிற்கான சங்கத் தேர்வுகள் மாநில மற்றும் மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கு 11.01.2020-ஆம் நாளன்றும், பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 10.01.2020-ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணாக்கர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

Book Post

இயக்குநர் அவர்கள்,
தமிழ் இணையக் கல்விக்கழகம்,
அண்ணா பல்கலைக்கழக வளாகம்,
காந்தி மண்டபம் சாலை,
கோட்டூர்
சென்னை - 600 025.

RNP
625001 24.12.2019
A402 28871361
भारत POSTAGE INDIA
₹0.25
P140749

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு,
மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1